## இந்திய உயர்ஸ்தானிகராலயம்
## கொழும்பு

### ஊடக அறிக்கை

### கொழும்பில் காந்தி ஜெயந்தி கொண்டாட்டங்கள்

155 ஆவது காந்தி ஜெயந்தியினை நினைவுகூரும் முகமாக இலங்கை பிரதமர் மேன்மைதங்கிய கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களும் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி காலை கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அந்நிகழ்வுகளை தொடர்ந்து உயர்ஸ்தானிகர் அவர்கள் பிரதமர் மேன்மைதங்கிய கலாநிதி ஹரிணி அமரசூரிய அவர்களுடன் சந்திப்பொன்றினையும் மேற்கொண்டிருந்தார்.

2. மகாத்மா காந்தி அவர்களது 150ஆவது பிறந்த தின நினைவினை முன்னிட்டு 2019 ஆம் ஆண்டில் இந்த மார்பளவுச் சிலையானது இந்தியாவால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தது. மகாத்மா காந்தி அவர்கள் தியான நிலையில் இருக்கும் இந்த 42 அங்குல வெண்கல சிலையானது பத்மபூசண் விருதுபெற்ற ராம் வஞ்ஜி சுதர் அவர்களால் வடிவமைக்கப்பட்டதாகும். குஜராத்தின் கேவாடியாவில் உள்ள உலகின் மிகவும் உயரமான வெண்கலச் சிலையான சர்தார் பட்டேல் அவர்களது சிலையும் சுதர் அவர்களால் வடிவமைக்கப்பட்டதாகும்.

3. காந்தி ஜெயந்தியினை நினைவுகூரும் முகமாக இன்று மாலை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் ஒத்துழைப்புடன், இலங்கை இந்திய சங்கத்தால் மகாத்மா காந்தி நினைவுப் பேருரை ஒன்றும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்நினைவுப் பேருரையானது இந்தியாவுக்கான முன்னாள் இலங்கை உயர்ஸ்தானிகர் திரு. ஒஸ்டின் பெர்னான்டோ அவர்களால் நிகழ்த்தப்படும். இலங்கை இந்திய சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இந்நிகழ்வானது மகாத்மா காந்தியின் போதனைகள் மற்றும்

இன்றைய உலகிற்கான அவற்றின் பொருத்தப்பாடு குறித்து பிரதிபலிப்பதற்கான ஒரு தளமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

*****

**கொழும்பு**
**02 ஒக்டோபர் 2024**